**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.107/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : பிரதீபா | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**1** வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்**. 4** வது எதிரி ஆஜர் இல்லை**. (3,5** எதிரிகள் **CC.No.66/2026**ல் பிடிகட்டளையில் உள்ளார்**)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 107/2018 16.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 3.35 PM**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் அருளானந்தம் நகர் 6 வது குறுக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் மருத்துவராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 10.04.2017 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும், எனது கணவரும் காரில் சென்னைக்கு கிளம்பினோம். எனது வீட்டிற்கு சர்வீஸ் செக்ரியுட்டியாக அக்பர் என்பவரை வேலைக்கு அனுப்புவதாக என்னிடம் செக்ரியுட்டி சர்வீஸ் சொன்னார்கள். இரவு 8.00 மணியளவில் செக்ரியுட்டி சர்வீஸ்சில் அனுப்பிய பாண்டியன் என்ற நபர் எனது கணவருக்கு போன் மூலமாக வீட்டின் கதவை திறக்க முடியவில்லை என்று தகவல் சொன்னார். எனது கணவர் வீட்டின் கதவை திறக்க முடியாததால் என் கணவரின் மூலமாக என் வீட்டிற்கு அருகிலுள்ள உறவினர் சேரராஜன் அவரை வர சொல்லி எனது வீட்டை பார்க்க சொன்னேன். சேரராஜன் எனது வீட்டிற்கு சென்று வீட்டின் முன் பக்க கதவு உடைக்கப்பட்டிருந்ததாகவும், சிமெண்ட் கல்லின் மூலமாக கதவு உடைக்கப்பட்டிருந்தாக என்னிடம் சொன்னார். நான் வீட்டின் உள்ளே செல்லவேண்டாம் என்றும், காவல்துறையினருக்கு தகவல் கொடுக்க சொன்னேன். நான் திரும்பி வந்து வீட்டை பார்த்தபோது போலீசார் சம்பவயிடத்தில் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னென்ன பொருள்கள் காணவில்லை என்பதை அடையாளம் காட்ட சொன்னதற்கு நான், எனது வீட்டின் முதல் தளத்தில் சென்று பார்த்த போது எனது பீரோவின் சாவியை பயன்படுத்தி திறக்கப்பட்டிருந்தது. புடவைகள் சிதறி கிடந்தன. 4 வைர மோதிரங்கள், 2 வைர வளையல்கள், தோடு –15 ஜோடி, (சுமார் 150 கிராம் நகை ) .

பின்பு 12.04.2017 ம் தேதி மீண்டும் காணாமல்போன நகைகள் பற்றிய விவரங்களை போலீசாரிடம் எழுத்து மூலமாக கொடுத்தேன். அதில் ஒரு வைரமாலை, 1/2 பவுன் 6 தங்க காசுகள், உதிரியாக இருந்த வைரங்கள் , சாம்சங் போன் , ரூ. 3,25,000/– ரொக்கம் பணம் ஆகியவற்றை காணவில்லை என சேர்த்து எழுதி கொடுத்தேன். என்னிடம் காட்டபடும புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகைகள் , பணம் என்னுடையதுதான். **அது அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது நகைகளை 3 வாரத்தில் போலீசார் கண்டுபிடித்து கொடுத்தார்கள். நான் அதனை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டேன். ரொக்க பணத்தை முழுவதுமாக கிடைத்தது. 6 ஜோடி தோடு, எனது நகைகளை உருக்கி தங்ககட்டியாக கொடுத்தார்கள். அது எத்தனை கிராம் என்று எனக்கு நினைவு இல்லை. சரவணன், முருகானந்தம், அலெக்ஸ்பாண்டியன், ஜீவானந்தம், சுந்தரபாண்டியன் ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக போலீசார் கூறி எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் எப்போதும் வெளியே செல்லும் போது செக்ரியுட்டி ஏஜென்ஸி மூலமாக காவலாளியை நியமிப்பீர்களா என்றால் என் வீட்டில் எப்போதும் ஒரு வேலையாளி இருப்பார். அவர் இல்லை என்பதால் பாண்டியன் ஏஜென்ஸி மூலமாக செக்ரியுட்டியாக ஒருவர் வந்தார். செக்ரியுட்டியாக வந்த நபரின் பெயர் தெரியுமா என்றால் அக்பர். எனது வீட்டில் வேலை செய்த நபர் எப்போது வேலை விட்டு சென்றார் என்று எனக்கு தெரியாது. நான் சென்னை சென்று கொண்டிருந்தபோது பாண்டியன் தான் எனது கணவருக்கு போன் மூலமாக அழைத்து தகவல் சொன்னார். கதவு உடைந்த விவரம் , சேரராஜன் என்பவர் கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் நேரடியாக சம்பவம் நடந்த பிறகு வீட்டிற்கு தான் வந்தேன். நேரம் சரியாக ஞாபகமில்லை. நான் வீட்டிற்கு செல்லுமபோது போலீசார் மற்றும் அக்கம் பக்கம் உள்ளவர் இருந்தார்களா என்றால் போலீசார் மட்டும் இருந்தனர். நான் வீட்டிற்கு செல்லும்போது போலீசார் வீட்டின் உள்ளே தான் இருந்தனர். சேரராஜன் சொல்லி தான் போலீசார் வீட்டிற்கு வந்த விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. போலீசார் சம்பவத்தன்றே நடந்த சம்பவம் குறித்து எழுதி புகார் பெற்றார்கள். நான் அதன் பின்பு காவல்நிலையம் எதுவும் செல்லவில்லை. நான் 3 வாரத்திற்கு பிறகு தான் காவல்நிலையம் சென்றேன். எனது வீட்டை சுற்றி உறவினர்கள் இருக்கிறார்களா என்றால் 2-3 நபர்கள் இருக்கிறார்கள். என் வீட்டின்

அருகில் குடியிருக்கும் உறவினர்கள் எனது வீட்டிற்கு வருவதுபோவது வழக்கம். எனது உறவினர்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதால் அவர்களுக்கு எனது வீட்டில் உள்ள நகைகள் குறித்த விவரம் தெரியும் என்றால் சரியல்ல. புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்களுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.107/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 2)**

| | |
|---|---|
| **Name** : நாகராஜ் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**1** வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்**. 4** வது எதிரி ஆஜர் இல்லை**. (3,5** எதிரிகள் **CC.No.66/2026**ல் பிடிகட்டளையில் உள்ளார்**)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 107/2018 16.03.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 4.15 PM**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் அருளானந்த நகர் 6 வது தெருவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10.04.2017 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் எனது மனைவியும் சென்னைக்கு சென்று கொண்டிருந்தபோது 8.00 மணியளவில் செக்ரியுட்டி எனது வீட்டின் கதவை திறந்தபோது உள்பக்கம் தாழ்பாள் போடப்பட்டிருந்தாக செக்ரியுட்டி சொன்னார். நான் கதவை நன்றாக திறக்க சொன்னேன். அவரால் திறக்க முடியவில்லை என்று என்னிடம் சொன்னார். நான் எனது உறவினர் சேரராஜன் மூலமாக வீட்டை திறக்க சொல்லி சொன்னேன். அவரும் வந்து பார்த்துவிட்டு திறக்க முடியவில்லை என்று கூறினார். எனது உறவினர் சேரராஜன் வீட்டின் உள்ளே பார்த்தபோது வீட்டின் நிலைகதவு திறந்திருந்ததை பற்றி போலீசாரிடம் தகவல் கொடுக்க சொன்னேன். நானும் எனது மனைவியும் உடனடியாக எனது வீட்டிற்கு வந்து விட்டோம். நானும் எனது மமனைவியும் முதல் தளத்திலுள்ள அறையை பார்த்தபோது புடவைகள் சிதறி கிடந்தன. 150 கிராம் வைர நகைகள் , வைர கற்கள், ரூ. 3,50,000-4,00,000/- வரை ரொக்க பணம் காணவில்லை. மீண்டும் 12ம் தேதி எனது மனைவி காணாமல் போன நகைகளை பற்றி போலீசாரிடம் எழுத்து மூலமாக கொடுத்தார். அதில் வைர அட்டிகை பற்றி குறிப்பிட்டிருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சென்னையிலிருந்து திரும்பி வரும்போது வீட்டில் நடந்த சம்பவம் குறித்து போன் மூலமாகவோ, எந்த ஒரு புகாரும் கொடுககவில்லை என்றால் சரிதான். சம்பவம் பற்றி சேரராஜன் என்பவர் கூறிதான்தெரியும் என்றால் விழுப்புரம் வரை சென்று விட்டு பின்பு சம்பவம் பற்றி தெரிந்த உடன் வீட்டிற்கு வந்து பார்த்தோம். வீட்டின் கதவு, பீரோ  உடைககப்பட்டிருந்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சேரராஜன் போனில் எனக்கு தகவல் கூறினார். பின்பு நான் வந்து பார்த்தேன். 12.04.2017 ம் தேதி வைர அட்டிகை புகாரில் குறிப்பிடமால் விட்டது குறித்து மீண்டும் அது குறித்து குறிப்பிட்டு எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அன்றையதினம் அதில் என்னிடம் சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்களுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.